செ.வெ.எண்: 06 நாள்:03.01.2017

**அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.56.37 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.01.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அரிமளம் ஊராட்சி ஒன்றியம், மிரட்டுநிலை ஊராட்சி, மிரட்டுநிலையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் வெட்டப்பட்டு வரும் தனிநபர் பண்ணைக் குட்டை பணியையும், மேல்நிலைவயல் ஊராட்சி, மேல்நிலைப்பட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயகூடம் கட்டுமான பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், நெடுங்குடி ஊராட்சி, நெடுங்குடியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நாடக மேடை கட்டுமான பணியையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.7இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி கட்டுமான பணியையும், ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கிராம சேவை மையம் கட்டுமான பணியையும் என மொத்தம் ரூ.56.35 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது பண்ணை குட்டையினை சரியான ஆழத்தில் வெட்டவும், மேலும் முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களைக் கொண்டு விரைவாக கட்டி முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சரஸ்வதி, திருமதி.மணிமேகலை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**